# வளம்

இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையத்தின் செய்திமடல்

காலாண்டுச் செய்திமடல்

ஏப்ரல் 2005 மலர்-1 இதழ்-1

மேலும் தகவல்களுக்கு www.ciks.org என்ற இணையத்தளத்தைப் பார்க்கவும்.




## இயற்கைவழி வேளாண்மை விழா

இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையம் இந்த ஆண்டு பிப்ரவரி 26 ஆம் தேதி அன்று செங்கல்பட்டில் "இயற்கைவழி வேளாண்மை விழா"வினை சிறப்பாக நடத்தியது. இந்த விழாவில் இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையத்தின் ஆலோசனையுடன் இயற்கை விவசாயம் செய்யும் ஆயிரத்திற்கும் மேலான விவசாயிகள் திருவள்ளூர், திருவண்ணாமலை, காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களிலிருந்து கலந்து கொண்டனர். காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் திரு. ஆர். வெங்கடேசன் இ.ஆ.ப. அவர்கள் இந்த விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். நபார்ட் (NABARD) வங்கியின் துணை பொது மேலாளர் திரு. பி. சாமிநாதன் அவர்களும், காஞ்சிபுரம் மாவட்ட இணை வேளாண் இயக்குனர் திரு. எச். காதர் அவர்களும், காஞ்சிபுரம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட அலுவலர் திரு. பி. வேலுச்சாமி அவர்களும் இந்த விழாவில் முக்கிய விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். மையத்தின் இயக்குனர் ஆ.வே. பாலசுப்பிரமணியன் அவர்களின் வரவேற்புரையைத் தொடர்ந்து, கே. விஜயலட்சுமி அவர்கள் மையத்தின் பணிகளைப் பற்றி விளக்கினார். இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையத்தின் திட்டங்களில் ஒருங்கிணைந்து செயலாற்றும் மூன்று விவசாயிகள் தங்கள் இயற்கை விவசாய அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர். இதைத் தொடர்ந்து விநாயகநல்லூர் கிராமத்தில் பூச்சிக்கொல்லி தயாரிப்பகம் நிறுவ நிலத்தை தானமாக அளித்த திரு. சந்தானம் அவர்களை மாவட்ட ஆட்சியர் பொன்னாடை போர்த்தி கௌரவித்தார். சிறந்த சங்கமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட விநாயகநல்லூர் இயற்கை விவசாயிகள் சங்கத்திற்கு மாவட்ட ஆட்சியர் பரிசுத்தொகையாக ரூ. 2000/-த்தை வழங்கினார். அதை திருமதி. அமிர்தநாயகி பெற்றுக்கொண்டார். இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையத்தின் புதிய புத்தகங்களான "இயற்கைவழி நெல் சாகுபடி" (ஆங்கிலம் மற்றும் தமிழ்) மற்றும் "Herbs for Good Health" வெளியிடப்பட்டன. இந்த விழாவில் இயற்கை விவசாயிகள் சங்கங்களுக்கு வேளாண் உபகரணங்கள் வழங்கப்பட்டன. மேலும் இயற்கை வேளாண்மை கண்காட்சியும் நடைபெற்றது.








*இடமிருந்து வலம் : மாவட்ட ஆட்சியர் வருகை, விவசாயிகள் சங்கங்களுக்கு உபகரணங்கள் வழங்குதல், பெண் விவசாயிகளின் வருகை, விவசாயிகள் கண்காட்சியை பார்வையிடுதல், விவசாயிகளால் நிரம்பியுள்ள விழாக்கூடம், கண்காட்சியில் பாரம்பரிய நெல் ரகங்கள்*

CIKS 1995 - 2005 TENTH ANNIVERSARY

உங்கள் கருத்துக்கள் மற்றும் விமர்சனங்களை info@ciks.org என்ற மின்னஞ்சலுக்கு அனுப்புங்கள்.



# ஆய்வுத் திட்டங்கள் - ஒரு பார்வை

### விதைப் பாதுகாப்புத் திட்டம்

இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையம் ஃபோர்டு நிறுவனத்தின் (Ford Foundation) உதவியுடன் செயல்படுத்தி வரும் "இயற்கை விவசாயத்தின் மூலம் விவசாயிகளின் வாழ்க்கை தரத்தை உயர்த்தும்" திட்டத்தின் கீழ் 24 கிராமங்களில் இயற்கை விவசாயிகள் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. சங்கங்களைச் சேர்ந்த விவசாயிகளின் நெல் அறுவடை செய்யப்பட்டு, விற்பனைக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. விவசாயிகளுக்கு அடுத்த பட்டத்திற்கான நெல் விதைகளும், இடுபொருட்களும் வழங்கப்பட்டுள்ளன.

மூன்று மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகளுக்கு ''மண்வளப் பாதுகாப்பு'' என்ற தலைப்பில் பயிற்சியாளர் பயிலரங்குகள் நடத்தப்பட்டுள்ளன. மேலும், எட்டு கிராமங்களில் விதைப் பாதுகாப்பு வங்கிகள் அமைக்கப்பட்டு வருகின்றன. பிப்ரவரி மாதம் செங்கல்பட்டில் நடைபெற்ற "இயற்கைவழி வேளாண்மை விழா"வில் காஞ்சிபுரம் மாவட்ட இயற்கை விவசாயிகள் சங்கத்திற்கு வேளாண் உபகரணங்கள் வழங்கப்பட்டன. மார்ச் மாதம் 22ஆம் தேதி அன்று ஃபோர்டு நிறுவனத்தின் திட்ட அலுவலர் டாக்டர் வசந்த் சபர்வால் அவர்கள் சுக்கங்கொல்லையில் உள்ள ஆய்வுப்பண்ணைக்கு வந்திருந்தார். அவர் மையத்தின் பணிகளைப் பற்றி தெரிந்து கொண்டார். மேலும், இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும் கிராமங்களைச் சேர்ந்த இயற்கை விவசாயிகள் சங்கப் பிரதிநிதிகள் ஆய்வுப்பண்ணைக்கு வந்திருந்தனர். அவர்களிடம் இந்தத் திட்டத்தின் செயல்பாடுகளைப் பற்றிக் கேட்டறிந்தார்.

### இயற்கைவழி பருத்தி சாகுபடி

இந்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் உதவியுடன், காஞ்சிபுரம், திண்டுக்கல், நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டுவரும் இந்தத் திட்டத்தின் மூலம் சீர்காழியில் ஐந்து கிராமங்களைச் சேர்ந்த இருபத்தைந்து விவசாயிகளுக்கும், சுனாமியால் தாக்கப்பட்ட நெய்தவாசல் கிராமத்தைச் சேர்ந்த பதினாறு விவசாயிகளுக்கும், காஞ்சிபுரத்தில் தண்டலம் கிராமத்தைச் சேர்ந்த இருபத்திநான்கு விவசாயிகளுக்கும் "இயற்கைவழி பருத்தி" என்ற தலைப்பில் இரண்டு நாள் பயிலரங்கு நடத்தப்பட்டது.

### காய்கறிகளில் விருட்சாயுர்வேத பரிசோதனை

இந்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறையின் உதவியுடன் கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் முதல் செயல்படுத்தப்படும் இந்தத் திட்டத்திற்காக சீர்காழியில் அல்லிவாக்கம், பாதரக்குடி கிராமங்களைச் சேர்ந்த நான்கு விவசாயிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்கு காய்கறி பயிர் செய்ய தேவையான இடுபொருட்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்தத் திட்டத்தின் மூலம் பூச்சி மற்றும் நோய் கட்டுப்பாட்டிற்கு விருட்சாயுர்வேத பரிசோதனைகள் கத்தரி, வெண்டை, மிளகாய் ஆகிய பயிர்களில் மேற்கொள்ளப்படுகின்றன. இதற்காக அல்லிவாக்கம் கிராமத்தைச் சேர்ந்த திரு. ரவிச்சந்திரன் என்ற விவசாயியின் வயலில் 10 சென்ட் அளவில் வெண்டை பயிர் செய்யப்பட்டுள்ளது.

### மக்கள் பங்கேற்புத் திட்டம்

"இயற்கை வேளாண்மையின் மூலம் விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும்" இந்தத் திட்டம் கபார்ட் (CAPART) ஐதராபாத் உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆலவாய் மற்றும் வேண்பாக்கம் கிராமங்களில் இயற்கை விவசாயிகள் சங்கத்தினால் கட்டப்பட்ட கிராம நூலகங்களை ஜனவரி 26-ஆம் தேதியன்று கே. விஜயலட்சுமி அவர்கள் திறந்து வைத்தார். இந்த நூலகத்திற்கான புத்தகங்களையும், பிற பொருட்களையும் இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையம் மக்கள் பங்கேற்புத் திட்டத்தின் மூலம் வழங்கியுள்ளது.

### இயற்கை வேளாண்மைக்கு மாறும் விவசாயிகள்

நரப்பாக்கம் கிராமத்தைச் சேர்ந்த மூன்று விவசாயிகள் இயற்கை வேளாண்மைக்கு முழுமையாக மாற காம்பாஸ் திட்டத்தின் மூலம் உதவி வழங்கப்படுகிறது. இந்த விவசாயிகளுக்கு மண்புழு உரத் தொட்டிகளும் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன.

### பூச்சி வளர்ப்பு ஆய்வகம்

காம்பாஸ் (COMPAS) என்ற பாரம்பரிய அறிவை / விவசாயத்தை மேம்படுத்தும் திட்டத்தின் மூலம் சீர்காழியில் பூச்சி வளர்ப்பு ஆய்வகம் நிறுவப்பட்டுள்ளது. இந்த ஆய்வகத்தில் தாவரக் கரைசல்களின் பூச்சிக்கட்டுப்பாட்டுத் திறன் மற்றும் வீரியத்தை பரிசோதிக்க ஆய்வுகள் மேற்கொள்ளப்படும். இதற்காக, செயற்கை உணவுகளை பயன்படுத்தி படைப்புழுக்கள் வளர்க்கப்பட்டு வருகின்றன. மேலும் பூசணியில் மாவுப் பூச்சிகளை வளர்ப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

### காம்பாஸ் (COMPAS) திட்டம்

காம்பாஸ் நிறுவன வளர்ச்சித் திட்டத்தின் சர்வதேச ஆலோசகர் டாக்டர் விஜய் பதக்கி அவர்கள் மார்ச் 2-ஆம் தேதியன்று இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையத்திற்கு வந்திருந்தார். மார்ச் 9-ஆம் தேதி அன்று ஆ. வே. பாலசுப்பிரமணியன் அவர்கள் பெங்களூரில் உள்ள எஃப்.ஆர்.எல்.எச்.டி. (FRLHT) நிறுவனத்தைச் சேர்ந்த திரு. தர்ஷன் சங்கர் அவர்களையும் டாக்டர் ஜி.ஜி. கங்காதரன் அவர்களையும், க்ரீன் ஃபௌண்டேஷன் (GREEN FOUNDATION) நிறுவனத்தைச் சேர்ந்த டாக்டர் நாடா கவுடா அவர்களையும் சந்தித்து காம்பாஸ் திட்டத்தின் பல்வேறு அம்சங்கள் குறித்து கலந்துரையாடினார்.

### வல்லுனர் குழு வருகை

தேசிய தாவரவியல் ஆராய்ச்சி மையத்தின் இயக்குனர் டாக்டர் புஷ்பாங்கதன் அவர்களைத் தலைவராகக் கொண்ட அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் மூன்று நபர் வல்லுனர் குழு மார்ச் 29ஆம் தேதி அன்று இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையத்திற்கு வருகை தந்தது. இந்தக் குழுவில் எம்.எஸ்.எஸ்.ஆர்.எஃப் (MSSRF) நிறுவனத்தின் ஆலோசகர் டாக்டர் ஜான் ஜோசஃப் அவர்களும், இந்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் விஞ்ஞான அலுவலர் மேஜர் எஸ். சாட்டர்ஜி அவர்களும் இடம் பெற்றிருந்தனர். இந்தத் திட்டத்தின் மூலம் செயல்படுத்தப்பட்ட பல்வேறு பணிகளைப் பற்றிய ஒரு கலந்துரையாடல் காலையில் நடைபெற்றது. இதைத் தொடர்ந்து, மாலையில் சுக்கங்கொல்லையில் உள்ள ஆய்வுப் பண்ணையையும், தாவரக்கரைசல் தயாரிப்பகத்தையும் வல்லுனர் குழு பார்வையிட்டனர்.

### பசுந்தாள் கிராமம்

மண் வளத்தை அதிகரிக்கும் பசுந்தாள் பயிர் வளர்ப்பை ஊக்குவிப்பதற்காக காஞ்சிபுரத்தில் "பசுந்தாள் கிராம திட்டம்" செயல்படுத்தப்பட்டு வருகிறது. அமெரிக்காவில் உள்ள காட்டன்வுட் நிறுவனத்தின் (COTTONWOOD FOUNDATION) உதவியுடன் செயல்படுத்தப்படும்



# நிகழ்வுகள் - ஒரு அலசல்

இந்தத் திட்டத்திற்காக ஆனூர், ஆலவாய், வேண்பாக்கம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 37 விவசாயிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்கு பசுந்தாள் பயிர் விதைகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், அவர்களுக்கு தேவையான தொழில்நுட்ப உதவிகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

**சுனாமி நிவாரணப் பணிகள்**

நாகப்பட்டினம் மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட வேளாண் நிலங்களை சீரமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ள இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையம், மண் மாதிரிகளை பரிசோதித்து வருகிறது. இந்த நிலங்களில் பாரம்பரிய நெல் ரகங்களும் பயிரிடப்பட்டு ஆய்வுகள் நடத்தப்படுகின்றன. மேலும், சீர்காழி களப்பணி ஊழியர்கள் சுபாஷிணி ஸ்ரீதர் மற்றும் மகேஸ்வரி திருச்சியில் அமைந்துள்ள களர்மண் ஆராய்ச்சி நிலையத்திற்கு சென்று அங்குள்ள விஞ்ஞானிகளுடன் மண் சீரமைப்புக் குறித்து உரையாடினர்.

புதுக்குப்பம், கீழமூவர்க்கரை ஆகிய கிராமங்களில் இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையத்தால் மேற்கொள்ளப்படும் சுனாமி நிவாரணப் பணிகளை பார்வையிட ஜனவரி 24-ஆம் தேதி அன்று கே. விஜயலட்சுமி அவர்கள் சீர்காழி சென்றிருந்தார். பிப்ரவரி மாதம் 2-ஆம் தேதி அன்று ஆ.வே. பாலசுப்பிரமணியன் அவர்கள் சுனாமியால் பாதிக்கப்பட்ட புதுக்குப்பம், நெய்தவாசல், கூழையார் ஆகிய கிராமங்களுக்கு சென்று அங்குள்ள விவசாயிகளுடன் கலந்துரையாடினார்.

**ஆய்வுப் பண்ணையில் நடந்த பணிகள்**

காஞ்சிபுரம் மாவட்டத்தில், சுக்கங்கொல்லையில் உள்ள மையத்தின் ஆய்வுப் பண்ணையில் 31 பாரம்பரிய நெல் ரகங்கள் அறுவடை செய்யப்பட்டு 21 பாரம்பரிய நெல் ரகங்கள் நடவு செய்யப்பட்டுள்ளன. இயற்கை முறையில் சாகுபடி செய்யப்பட்ட தர்பூசணி அறுவடை செய்யப்பட்டுள்ளது, நிலக்கடலை அறுவடைக்கு தயாராக உள்ளது. விதைப் பெருக்கத்திற்காக பசுந்தாள் உரப்பயிர்கள் நடப்பட்டுள்ளன.

**அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் பயிற்சி**

அண்ணாமலை பல்கலைகழகத்தின் நோயியல் துறையின் தலைமை பேராசிரியர் திரு. குருஷேவ் அவர்களின் அழைப்பின்பேரில் ஆ.வே. பாலசுப்பிரமணியன் அவர்கள் பிப்ரவரி மாதம் 1-ஆம் தேதியன்று சிதம்பரம் சென்றிருந்தார். அவர் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற UGC பயிற்சி வகுப்பில் “விருட்சாயுர்வேதம் - தாவரங்களுக்கான ஆயுர்வேதம்” என்ற தலைப்பில் பேசினார். இந்த பயிற்சி வகுப்பில் பல்வேறு வேளாண் பல்கலைக்கழகங்கள் மற்றும் ஆய்வு மையங்களைச் சேர்ந்த பல விஞ்ஞானிகள் கலந்து கொண்டனர். இதில் பங்கேற்ற 36 நபர்கள் ஜனவரி 28-ஆம் தேதியன்று சீர்காழி களப்பணி அலுவலகத்திற்கும், அகணி ஆய்வு வயலுக்கும் வந்திருந்தனர்.

**மத்திய களர்மண் ஆராய்ச்சி மைய விஞ்ஞானிகளுடன் சந்திப்பு**

சுனாமியால் பாதிக்கப்பட்ட விவசாய நிலங்களைச் சீரமைக்கும் பணியின் தொடர்பாக ஹரியானா மாநிலத்தில் உள்ள கர்நால் என்ற இடத்தில் அமைந்துள்ள மத்திய களர் மண் ஆராய்ச்சி மையத்திற்கு ஆ.வே. பாலசுப்பிரமணியன் அவர்கள் பிப்ரவரி 23-ஆம் தேதி சென்றிருந்தார். அங்கு, அவர் மையத்தின் இயக்குனர் டாக்டர் மின்ஹாஸ் அவர்களையும், உழவியல் துறையைச் சேர்ந்த டாக்டர் ஆனந்த் ஸ்வரூப் அவர்களையும் சந்தித்து, களர் மற்றும் உவர் நிலங்களை சீரமைக்க ஆராய்ச்சி மையம் மேற்கொண்டுவரும் வழிமுறைகளைப் பற்றி கலந்துரையாடினார்.

**வல்லுனர் குழு கூட்டம்**

இந்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறையின் சார்பில் பிப்ரவரி 17 ஆம் தேதி சென்னையில் வல்லுனர் குழு கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்திற்கு “அறிவியல் மற்றும் தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்தி சுனாமி பாதித்த இடங்களை சீரமைக்கும் ஆய்வுத் திட்டங்கள்” குறிப்பிட்ட சில நிறுவனங்களிடமிருந்து வரவேற்கப்பட்டன. ஆ.வே. பாலசுப்பிரமணியன் அவர்களும், சுபாஷிணி ஸ்ரீதர் அவர்களும் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றனர். அவர்கள், நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தாலுகாவில் சுனாமி பாதித்த வேளான் நிலங்களை சீரமைக்க இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையத்தின் திட்டம் ஒன்றைப் பற்றி விளக்கி வல்லுனர் குழுவிடம் கொடுத்தனர்.

**தொண்டு நிறுவன பிரதிநிதிகள் வருகை**

இயற்கை வேளாண்மை பற்றிய தகவல்கள் மற்றும் தொழில்நுட்பங்களை அறிந்துகொள்ள மேற்கொள்ளப்பட்ட பயணத்தின் ஒரு பகுதியாக கர்நாடகாவின் ஏஎம்ஈ (AME), மைரடா (MYRADA) மற்றும் கவாட் (KAWAD) நிறுவனங்களிலிருந்து 15 நபர்கள் இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையத்தின் ஆய்வுப் பண்ணைக்கு ஜனவரி மாதம் 28-ஆம் தேதி வந்திருந்தனர். அவர்களுக்கு மையத்தின் பல்வேறு பணிகள் குறித்து விளக்கிக் கூறப்பட்டது.

# சிறப்புச் செய்திகள்

## தொழில்நுட்ப உதவி மையம்

இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையம் கபார்ட்டின் 23-ஆவது தொழில்நுட்ப உதவி மையமாக (Technology Resource Centre) அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக சுக்கங்கொல்லையில் உள்ள ஆய்வுப்பண்ணையில் பயிற்சி மையம் ஒன்றை நிறுவ ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இந்த மையம் விவசாயிகளுக்கும், தொண்டு நிறுவன பிரதிநிதிகளுக்கும் பயிற்சி அளிக்கப் பயன்படுத்தப்படும்.

## கால்நடைகளின் கால்காணை நோயைக் குணப்படுத்தும் ரணகள்ளி

இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையம் திருவள்ளூர் மாவட்டத்தில் சில கிராமங்களில் இயற்கை விவசாயிகள் சங்கங்களை அமைத்து, அதன் மூலம் விவசாயிகளுக்கு இயற்கை விவசாயம் மற்றும் பாரம்பரிய மருத்துவம் குறித்து பயிற்சி அளித்து வருகிறது. சில மாதங்களுக்கு முன்பு, இந்த கிராமங்களில் உள்ள பல கால்நடைகள் கால் மற்றும் வாய் காணை நோயினால் பாதிக்கப்பட்டு இறந்து போயின. இந்த சமயத்தில் அட்டாவரம் கிராமத்தைச் சேர்ந்த திரு. கே. பன்னீர்செல்வம் என்ற விவசாயி ரணகள்ளி இலைகளை அரைத்து பாதிக்கப்பட்ட தனது ஆடுகளின் கால்களில் பூசி வந்தார். நான்கு நாட்களில் ஆடுகளில் நோயின் அறிகுறிகள் மறைந்ததோடு, ஆடுகளும் நன்றாக நடக்கத் துவங்கின. இதே போன்று திரு. வெங்கடேசன் என்ற விவசாயி கோழிகளுக்கும் இந்த இலைப்பசையைப் பயன்படுத்தி பயன்பெற்றுள்ளார். இந்தச் சம்பவங்களுக்குப் பின்னர் அந்த கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் தங்கள் கால்நடைகளுக்கு ஏற்படும் காணை நோய்க்கு ரணகள்ளி இலைகளைப் பயன்படுத்த முடிவு செய்துள்ளனர்.

## புத்தகங்கள் மற்றும் வீடியோ படங்கள்



### இயற்கைவழி காய்கறித் தோட்டம்

இந்தக் குறுந்தகடு (CD) உங்கள் தோட்டத்தை வடிவமைக்கவும், ரசாயனங்கள் மற்றும் பூச்சிக்கொல்லிகள் பயன்படுத்தாமல் இயற்கைவழியில் உங்கள் தோட்டத்தை பராமரிக்கவும் உதவும். இதில் காய்கறிகளைப் பயிர் செய்யும் முறை பற்றியும், மண்வளப் பாதுகாப்பு பற்றியும், பூச்சி மற்றும் நோய்க் கட்டுப்பாடு பற்றியும் தகவல்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

*விலை :*

*ரூ. 250/- (தமிழ்)*

*ரூ. 250/- (ஆங்கிலம்)*

## வருகையாளர் குறிப்பு

- ஜனவரி 6-ஆம் தேதி அன்று சமன்வயாவைச் (SAMANVAYA) சேர்ந்த திரு. ஓ.பி. ராமசுப்பிரமணியன் அவர்களும், காந்தி கல்வி மையத்தின் இயக்குனர் திரு. அண்ணாமலை அவர்களும் சுனாமி நிவாரணப் பணிகளைப் பற்றி கலந்துரையாட வந்திருந்தனர்.
- ஜனவரி 27-ஆம் தேதி அன்று யுஎன்டிபி (UNDP), டில்லியைச் சேர்ந்த டாக்டர் ரவிசெல்லம் அவர்கள் நமது பணிகளைப் பற்றி தெரிந்து கொள்வதற்காக வந்திருந்தார்.
- பிப்ரவரி 7-ஆம் தேதி சென்னையிலுள்ள பிரக்ருதி ஆயுர்வேதா மையத்தைச் சேர்ந்த சுஜாதா ராமசந்திரன் அவர்கள் வந்திருந்தார்.
- பிப்ரவரி 10 -ஆம் தேதி இத்தாலியில் உள்ள மோவிமோண்டோவைச் சேர்ந்த திருமதி விருந்தா தார் அவர்களும், குஜாராத் கிராம ஸ்வராஜ் சங்கத்தைச் சேர்ந்த திரு. தினேஷ் சங்வி அவர்களும் சுனாமி நிவாரணப் பணிகள் சம்பந்தமாக பேச வந்திருந்தனர்.
- பிப்ரவரி 17-ஆம் தேதி அன்று வாஷிங்டனிலுள்ள சர்வதேச நிதி நிறுவனத்தைச் (WORLD BANK) சேர்ந்த அலைஸ் சியூ அவர்களும் அசோக் கக்காத் அவர்களும் வந்திருந்தனர்.
- பிப்ரவரி 18 -ஆம் தேதி அன்று சத்தியமங்கலத்தில் உள்ள பன்னாரி அம்மன் தொழில்நுட்ப மையத்தின் உயிரியல் தொழில்நுட்பத் துறையின் பேராசிரியர் டாக்டர் ராம் ராம்மோகன் அவர்கள் வந்திருந்தார்.
- பிப்ரவரி 22-ஆம் தேதி அன்று ஸ்டெல்லா மேரிஸ் கல்லூரியிலிருந்து 33 பேர் அடங்கிய பேராசிரியர்கள் மற்றும் மாணவிகள் குழு சுக்கங்கொல்லையிலுள்ள ஆய்வுப் பண்ணைக்கு வந்திருந்தனர்.
- மார்ச் 2-ஆம் தேதியன்று கனடாவிலுள்ள 'ஈஸ்ட்வெஸ்ட் சஸ்டெய்னபிலிட்டி நெட்வொர்க்' (East-West Sustainability Network) என்ற அமைப்பிலிருந்து திருமதி. பெக்கி கோர்ஸ்வெல் அவர்கள் வந்திருந்தார்.
- மார்ச் 21-ஆம் தேதியன்று வால்பாறை இயற்கை பாதுகாப்பு அமைப்பிலிருந்து டாக்டர் திவ்யா முத்தப்பா அவர்களும், டாக்டர் சங்கர் ராமன் அவர்களும் வந்திருந்தனர்.
- மார்ச் 23-ஆம் தேதியன்று சென்னையிலுள்ள ஜெயேந்திர சரஸ்வதி ஆயுர்வேத கல்லூரியைச் சேர்ந்த டாக்டர் ரமாஜெயசுந்தர் அவர்களும், 'தி ஸ்கூல்' பள்ளியைச் சேர்ந்த சுமித்ரா கவுதமா அவர்களும் வந்திருந்தனர்.

**எங்கள் வெளியீடுகளைப் பெற எங்கள் மையத்தில் திருமதி. பத்மா அவர்களை தொடர்பு கொள்ளவும் அல்லது ciks@vsnl.com என்ற மின்னஞ்சலில் தொடர்பு கொள்ளவும்.**

ஆசிரியர் குழு : டாக்டர் கே. விஜயலட்சுமி & து.து. நிர்மலா தேவி

வடிவமைப்பு : ரா. ஆனந்த்

நூல்-அஞ்சல்

பெறுநர்

இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையம்

நடைமுறை வாழ்க்கைக்கு மரபு அறிவியல்

30, காந்திமண்டபம் சாலை, கோட்டூர்புரம், சென்னை - 600 085.

தொலைபேசி : 91-044-24471087, 24475862 தொலைநகல் : 91-044-24471114

மின்னஞ்சல் : **ciks@vsnl.com** இணையத்தளம் : **www.ciks.org**